# கிருஷ்ணாற்றங்கரை கதைகள்!

ஆற்றுப்படையின் 39வது பயணம்!

ஆற்றின் வழியே வரலாற்றைத் தேடி...

ஆற்றுப்படை

கற்றலும் சுற்றலும்!

பெசரட்டு முதல் புத்த ஸ்தூபி வரை...

கோங்குரா முதல் கொண்டவீடு வரை...




அக்டோபர் 31 & நவம்பர் 1, 2026

www.aatrupadai.com

ஆற்றின் வழியே வரலாற்றைத் தேடி...

# அக்டோபர் 31 & நவம்பர் 1, 2026

**பயணத்தில் காணவிருக்கும் இடங்கள்:**

1. கொண்டப்பள்ளி கோட்டை
2. மங்களகிரி லக்ஷ்மி நரசிம்ம சுவாமி கோயில்
3. உண்டவல்லி குகைகள்
4. கொண்டவீடு கோட்டை
5. கண்டசாலா புத்த ஸ்தூபம்
6. அமராவதி ஸ்தூபம்





# அமராவதி ஸ்தூபம்

*Amaravati / Dhanyakataka பகுதி, Palnadu/Guntur region, Andhra Pradesh.*

> கி.மு. 3ஆம் நூற்றாண்டு  கி.பி. 4ஆம் நூற்றாண்டு வரை வளர்ச்சியடைந்த நினைவுச்சின்னமாகக் குறிப்பிடுகிறது. அதாவது இது ஒரு குறிப்பிட்ட அரசரால் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் கட்டப்பட்ட monument அல்ல. பல நூற்றாண்டுகளாக வளர்ந்து, மாற்றப்பட்ட பௌத்த நினைவுச்சின்னம்.



Amaravati என்பது ஒரு stupa மட்டும் அல்ல.
இது ஒரு சிற்பக்கலை மரபின் பெயராகவே மாறியுள்ளது:
"Amaravati School / Amaravati Art"

இங்கு பயன்படுத்தப்பட்ட limestone relief sculpture–களில்:

- Buddha–related narratives
- symbolic Buddhist imagery
- lotus motifs
- animals
- human figures
- architectural motifs

போன்றவை மிக நுணுக்கமாகச் செதுக்கப்பட்டுள்ளன.

British Museum கூட Amaravati–யை ancient India–வின் மிக முக்கியமான Buddhist sites–ல் ஒன்றாகக் குறிப்பிடுகிறது; அங்கிருந்த sculptural panels stupa–வை அலங்கரித்ததாகவும் குறிப்பிடுகிறது.

கல்வெட்டுகள்:

Amaravati–யின் கல்வெட்டுகள் மிகவும் முக்கியமானவை.
அவை:

- நன்கொடையாளர்கள்
- பௌத்த நிறுவனங்கள்
- அரசர்கள்
- சமூகக் குழுக்கள்
- பொருளாதார ஆதரவு

பற்றி தகவல் தருகின்றன.

Amaravati panels–ன் முக்கியமான தொகுப்புகள் இந்தியாவிலும் உலகின் பல அருங்காட்சியகங்களிலும் உள்ளன.



## கண்டசாலா புத்த மகாஸ்தூபம்

விஜயவாடாவிலிருந்து: சுமார் 60 கி.மீ.
மச்சிலிப்பட்டினத்திலிருந்து: சுமார் 21 கி.மீ.

"கண்டசாலா என்பது ஒரு புத்த ஸ்தூபம் இருந்த இடம் மட்டுமல்ல; கிருஷ்ணா நதி, பண்டைய கடல் வணிகம், நகர வளர்ச்சி மற்றும் பௌத்த நிறுவனங்கள் ஒன்றோடொன்று இணைந்திருந்ததை வெளிப்படுத்தும் முக்கியமான Early Historic தளம்."

National Monuments Authority–யின் ஆவணங்கள் கண்டசாலாவை பண்டைய துறைமுக நகரம் / வர்த்தக மையம் என்று குறிப்பிடுகின்றன. அங்கு Roman மற்றும் Satavahana நாணயங்கள், கப்பல் தொடர்பான சான்றுகள் மற்றும் பிற தொல்லியல் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக அந்த ஆவணம் பதிவு செய்கிறது.

இதை இன்னும் பரந்த தொல்லியல் ஆய்வுகளுடன் சேர்த்துப் பார்த்தால், கீழ் கிருஷ்ணா பகுதியின் Ghantasala – Amaravati/Dharanikota – Bhattiprolu போன்ற நகரங்கள் கடல் மற்றும் நதிவழி வர்த்தகச் செயல்பாடுகளுடன் தொடர்புடைய Early Historic settlement–களாக இருந்திருக்கலாம் என்று ஆய்வுகள் முன்வைக்கின்றன.

ஸ்தூபத்தின் கட்டிடக்கலை:

கண்டசாலா மகாஸ்தூபத்தின் முதன்மை அமைப்பு சுமார் 17 மீட்டர் விட்டமும் 7 மீட்டர் உயரமும் கொண்டதாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மையப்பகுதியில் தனித்துவமான செங்கல் கட்டமைப்பு இருந்தது. ஸ்தூபத்தின் கட்டிடத் திட்டம், அமராவதி மற்றும் பட்டிப்ரோலு போன்ற ஆந்திரப் பௌத்த மையங்களுடன் ஒப்பிடப்பட்டாலும், கண்டசாலாவின் மைய அமைப்பு தனித்துவமானதாக ஆய்வுகளில் குறிப்பிடப்படுகிறது.

தொல்லியல் & கல்வெட்டுகள்:

கண்டசாலாவில் இருந்து பிராகிருத மொழியில் எழுதப்பட்ட பல ஆரம்பகால கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தற்போதைய ஆய்வுகள், கண்டசாலாவுடன் தொடர்புடைய 17 கல்வெட்டு பதிவுகளை தொகுத்து விவாதிக்கின்றன. இவற்றில் சில கல்வெட்டுகள் Kaṇṭakasola என்ற இடப்பெயரையும், Buddhist establishments–க்கு செய்யப்பட்ட தனிநபர் நன்கொடைகளையும் பதிவு செய்கின்றன.

கண்டசாலா மகாஸ்தூபம் சுமார் 17 மீட்டர் விட்டமும் 7–7.8 மீட்டர் உயரமும் கொண்டதாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. அதன் வடிவமைப்பு அமராவதி, பட்டிப்ரோலு போன்ற பௌத்த ஸ்தூபங்களுடன் ஒப்பிடத்தக்கது; அதே நேரத்தில் அதன் கட்டிடத் திட்டத்தில் தனித்துவமான அம்சங்களும் உள்ளன.

Alexander Rea–வின் அகழாய்வு பதிவுகளில் மையத்தில் ஒரு செங்கல் கட்டமைப்பு, அதைச் சுற்றிய சதுர மற்றும் வட்ட வடிவ கட்டமைப்புகள், மேலும் சுற்றுப்பாதை போன்ற அமைப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதனால் இது வெறும் மண் மேடு அல்ல; திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ஒரு பெரிய பௌத்த நினைவுச்சின்னத் தொகுதி.

# கொண்டவீடு கோட்டை

Guntur மாவட்டத்தில் உள்ள Kondaveedu village–க்கு அருகிலுள்ள மலைத்தொடரில் அமைந்துள்ளது. விஜயவாடாவிலிருந்து சுமார் 70 கி.மீ.; Guntur–இலிருந்து சுமார் 30–32 கி.மீ.



ஆந்திராவின் இடைக்கால அரசியல் அதிகாரம் எப்படி மாறியது என்பதற்கான ஒரு “கல் ஆவணம்”.

கொண்டவீடு ஒரு Reddy அரசர்களின் முக்கியமான hill–fort centre ஆக வளர்ந்தது. கோட்டை அமைந்துள்ள மலைப்பகுதி முதலில் Telugu Chodas/Kakatiya காலங்களுடன் தொடர்புடையதாக சில ஆதாரங்கள் குறிப்பிடுகின்றன; பின்னர் Prolaya Vema Reddy காலத்தில் Reddy அரசின் முக்கிய கோட்டை அமைப்பாக வளர்ந்தது என்று வரலாற்று ஆதாரங்கள் கூறுகின்றன.

கோட்டையின் கட்டிடக்கலை:

கொண்டவீடு ஒரு தனி கட்டிடம் அல்ல.
முழு hill range–ல் பல பாதுகாப்பு அமைப்புகள் இருந்தன.
முக்கியமாக:

- massive ramparts
- bastions
- gateways
- granaries
- warehouses
- wells
- water reservoirs
- pillared structures
- temples
- defensive structures

ஆகியவை.

முக்கிய நுழைவாயில்களில் குறிப்பிடத்தக்கவை:
Kolepalli Darwaza
Nadella Darwaza

நீர் மேலாண்மை:

இது ஒரு கோட்டையைப் புரிந்துகொள்ள மிகவும் முக்கியமான point.
மலைமேல் வாழும் மக்களுக்கு நீர் கிடைப்பதற்காக:

- Mutyalamma Cheruvu
- Puttalamma Cheruvu
- Vedulla Cheruvu

போன்ற நீர்நிலைகள் பயன்படுத்தப்பட்டதாக ஆதாரங்கள் குறிப்பிடுகின்றன.

2019–ல் கொண்டவீடு கோட்டை வளாகத்தில், பாழடைந்த ஒரு Hindu temple–ன் கீழ் Buddhist stupa remains கண்டுபிடிக்கப்பட்டதாக Incredible India பதிவு செய்கிறது.

அவை Later Satavahana period, கி.பி. 1–2ஆம் நூற்றாண்டு காலத்தைச் சேர்ந்ததாக குறிப்பிடப்படுகிறது.



# கொண்டப்பள்ளி கோட்டை

கொண்டப்பள்ளி, NTR District, Andhra Pradesh.
விஜயவாடாவுக்கு மேற்கே சுமார் 28–30 கி.மீ. தொலைவில் உள்ளது.

கொண்டப்பள்ளியின் முக்கியத்துவம் கோட்டைச் சுவர்களில் மட்டும் இல்லை.
கிருஷ்ணா ஆற்றுப் பள்ளத்தாக்கைக் கண்காணிக்கக்கூடிய அதன் புவியியல் அமைப்பே அதன் இராணுவ முக்கியத்துவத்தின் அடிப்படை.

வரலாறும் முக்கியத்துவமும்:

இங்கே Buddhism–லிருந்து நாம் Medieval political and military history–க்கு move ஆகிறோம்.

கொண்டப்பள்ளி கோட்டை பொதுவாக 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கோட்டையாகக் கருதப்படுகிறது. NTR மாவட்ட நிர்வாகத்தின் தகவல்படி, இது அனா–வேமா ரெட்டி (Ana–Vema Reddy), 1362–1377 CE காலத்தில் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. பின்னர் விஜயநகரப் பேரரசின் கிருஷ்ணதேவராயர் காலத்தில் கோட்டை கைப்பற்றப்பட்டு பேரரசின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

ஆனால் இதை ஒரே அரசரின் காலத்தில் உருவாக்கப்பட்டு முடிக்கப்பட்ட கோட்டை என்று பார்ப்பதைவிட, பல அரசியல் ஆட்சிகளின் கீழ் பயன்படுத்தப்பட்டு மாற்றமடைந்த இராணுவத் தளம் என்று பார்ப்பது வரலாற்று ரீதியாக பொருத்தமானது.

பின்னர் இந்தப் பகுதி குதுப் ஷாக்கள், முகலாயர்கள், பிரிட்டிஷ் உள்ளிட்ட பல்வேறு ஆட்சிகளின் கட்டுப்பாட்டில் சென்றதாக அரசு சுற்றுலா ஆதாரங்கள் குறிப்பிடுகின்றன.

கோட்டையின் கட்டிடக்கலை:

கொண்டப்பள்ளி ஒரு சாதாரண சமவெளிக் கோட்டை அல்ல. இது மலைச் சிகரத்தின் மீது அமைந்த hill fort.

முக்கியமானவை:

- Dargah Darwaza
- Golconda Darwaza
- கல் மதில்கள்
- பாதுகாப்பு அமைப்புகள்
- அரண்மனை எச்சங்கள்
- Tanishah Mahal
- நீர்த்தேக்க அமைப்புகள்
- காவல்/இராணுவப் பயன்பாட்டுக்கான கட்டிடங்கள்

NTR மாவட்ட நிர்வாகம் Dargah Darwaza ஒரு பெரிய granite block–ஐப் பயன்படுத்தி அமைக்கப்பட்டதாகக் குறிப்பிடுகிறது. கோட்டையின் உச்சிப் பகுதியில் Tanishah Mahal முக்கியமான கட்டிட எச்சமாக உள்ளது.

Kondapalli village–க்கு கீழே உள்ள Kondapalli Bommalu traditional wooden toy craft மிகவும் பிரபலமானது. Local administration இதன் பல நூற்றாண்டுகள் பழமையான craft tradition–ஐ குறிப்பிடுகிறது.

## லக்ஷ்மி நரசிம்ம சுவாமி கோயில் – மங்களகிரி

மங்களகிரி, Guntur District. விஜயவாடாவிலிருந்து அரசு ஆதாரப்படி சுமார் 10 – 13 கி.மீ. தொலைவில் உள்ளது

> **மங்களகிரி இன்று handloom weaving–க்கும் புகழ்பெற்றது. அரசு ஆவணங்கள் Mangalagiri sarees and fabrics–ஐ அந்தப் பகுதியின் முக்கியமான பாரம்பரிய உற்பத்தியாகக் குறிப்பிடுகின்றன.**




வரலாற்று முக்கியத்துவம்:

மங்களகிரி ஒரு பழமையான குடியிருப்பு மற்றும் வரலாற்று மையமாக இருந்துள்ளது. இன்றுள்ள கோயில் வளாகம் ஒரே காலத்தில் உருவானது அல்ல; பல காலகட்டங்களில் கட்டிடச் சேர்க்கைகள் மற்றும் patronage ஏற்பட்டுள்ளன.
குறிப்பாக விஜயநகர காலம் இத்தளத்தின் வரலாற்றில் முக்கியமானது.
மங்களகிரியில் கிடைக்கும் கல்வெட்டு சான்றுகளில் ஒன்று 1515 CE–ல் கிருஷ்ணதேவராயரின் காலத்தில் Kondavidu கைப்பற்றப்பட்ட நிகழ்வை பதிவு செய்கிறது என்று epigraphic studies குறிப்பிடுகின்றன. மற்றொரு கல்வெட்டு 1538 CE–ல் Sadasiva Raya காலத்தில் வழங்கப்பட்ட grants பற்றிப் பதிவு செய்கிறது.

கல்வெட்டுகளின் முக்கியத்துவம்:
இங்குள்ள கல்வெட்டுகள் கோயில் வரலாற்றுக்கு மட்டுமல்ல.

- விஜயநகர அரசியல்
- Kondavidu campaign
- நிலத் தானங்கள்
- உள்ளூர் அதிகாரிகள்
- கோயில் நிர்வாகம்

போன்றவற்றைப் புரிந்துகொள்ள உதவுகின்றன.

கட்டிடக்கலை:

மங்களகிரியின் மிகத் தெளிவாகத் தெரியும் கட்டிட அம்சம் அதன் மிகப்பெரிய ராஜகோபுரம்.
இது சுமார் 153 அடி உயரம் கொண்ட 11 அடுக்குக் கோபுரம்; 1807–1809 காலகட்டத்தில் வாசிரெட்டி வெங்கடாத்ரி நாயுடு காலத்தில் அதன் தற்போதைய உயரமான வடிவம் உருவாக்கப்பட்டது என்று கோயில் வரலாற்று ஆதாரங்கள் குறிப்பிடுகின்றன.

மேலும்:

- மண்டபங்கள்
- கல் தூண்கள்
- படிக்கட்டு அமைப்புகள்
- பழைய கல்வெட்டு பதிவுகள்
- விஜயநகர கால கட்டிடக் கூறுகள்
- பின்னர் நாயுடு காலத்தில் செய்யப்பட்ட விரிவாக்கங்கள்

ஆகியவற்றை தனித்தனி கால அடுக்குகளாக பார்க்கலாம்.



## உண்டவல்லி குகைகள்

கிருஷ்ணா ஆற்றின் வலது கரையில், விஜயவாடா—குண்டூர் பகுதியில் அமைந்துள்ளது. விஜயவாடாவிலிருந்து சுமார் 10 கி.மீ. சுற்றளவில் உள்ளது.

**தமிழகத்தின் Pallava rock-cut architecture-ஐ நினைவூட்டும் சில கூறுகள் கிருஷ்ணா பள்ளத்தாக்கிலும் காணப்படுகின்றன.**

வரலாற்றுக் காலம்:

உதயகிரி மற்றும் கண்டகிரி குகைகளின் கட்டிடக்கலையைப் பிரதிபலிக்கும் வகையில், ஆரம்பத்தில் ஒரு சமண இருப்பிடமாகச் செயல்பட்டது . இந்தக் குகைகள் பின்னர் பௌத்த துறவிகளின் தளமாக மாறி, இறுதியில் இந்து கோவில்களாக மாற்றப்பட்டன. உண்டவல்லி குகைகள், கி.பி. 4–5 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த குப்தர் கால பாறைச் செதுக்குக் கட்டிடக்கலைப் பாணியில் செதுக்கப்பட்டுள்ளன.

ASI-யின் தற்போதைய ஆய்வின்படி, உண்டவல்லியின் ஆரம்ப கட்டம் கி.பி. 7ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் நடுப்பகுதி வரை என architectural style அடிப்படையில் தேதியிடப்படுகிறது.

கட்டிடக்கலை:

- கிடந்த நிலையில் இருக்கும் Vishnu sculpture
- பெரிய pillared hall
- மூன்று shrine அமைப்புகள்
- massive pillars
- balustraded steps
- moonstones
- kudu arches
- sala-sikhara motifs

போன்றவை காணப்படுகின்றன.

தூண்களில் காணப்படும் taranga / wave-like brackets Pallava architectural forms-ஐ நினைவூட்டுவதாக ASI குறிப்பிடுகிறது.

குகைகள் முழுவதும் அழகான சிற்பங்களாலும், உயிரோட்டமான சிலைகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தாலும், ஒரே கருங்கல் பாறையில் செதுக்கப்பட்ட சீஷ நாகத்தின் மீது சயன கோலத்தில் படுத்திருக்கும் பத்மநாப விஷ்ணுவின் 5 மீட்டர் நீளச் சிலையே அங்குள்ள மிகவும் கண்கவர் காட்சியாகும்.

AC பேருந்து

தேநீர் & உணவு

வரலாற்று ஆய்வாளர்

AC தங்குமிடம்

நுழைவு பார்க்கிங் சுங்கக்கட்டணம்

புறப்பாடு மற்றும் வருகை: @விஜயவாடா ரயில் நிலையம்

# ஆற்றுப்படை – பயண விதிமுறைகள் & நிபந்தனைகள்

## பதிவு மற்றும் கட்டணம்

- பயணத்தில் இடம் உறுதி செய்ய முழு கட்டணமோ அல்லது அறிவிக்கப்பட்ட முன்பணமோ செலுத்தப்பட வேண்டும்.
- கட்டணம் செலுத்திய பிறகே பதிவு உறுதி செய்யப்படும்.
- இடங்கள் வரம்புடையவை என்பதால், முதலில் பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## ரத்து (Cancellation) விதிமுறைகள்

- விமானம், போக்குவரத்து, தங்கும் இடங்கள் மற்றும் நிர்வாகச் செலவுகள் ஆகியவை முன்பே திட்டமிடப்படுவதால் பயணத் தேதியில் இருந்து 30 நாட்களுக்குள் (30 ஆகஸ்ட் 2026 முதல் 29 செப் 2026 வரை) ரத்து செய்தால், எந்தவித தொகையும் திருப்பி வழங்கப்படாது.
- அதற்கு முன்புவரை ( 30 ஆகஸ்ட் 2026 வரை) உள்ள காலகட்டத்தில் ரத்து செய்யும் முன்பதிவுகளுக்கு 25% கட்டணப்பிடித்தம் செய்யப்படும்.
- பயண நாளில் வராதவர்கள் (No Show) அல்லது கடைசி நேர ரத்து செய்தவர்கள் முழுக் கட்டணத்தையும் செலுத்தியதாகவே கருதப்படுவர்.
- தனிப்பட்ட காரணங்களால் பயணத்தில் கலந்து கொள்ள முடியாத சூழ்நிலைகளுக்கு ஆற்றுப்படை பொறுப்பேற்காது.

## குழந்தைகள் தொடர்பான விதிமுறைகள்

- பயணத்தில் பங்கேற்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் முன்பதிவு அவசியம்.
- குழந்தைகளுக்கும் தங்குமிடம், போக்குவரத்து, உணவு, தேநீர், தண்ணீர் உள்ளிட்ட ஏற்பாடுகள் செய்யப்படுவதால், குழந்தைகளுக்கான கட்டணத்தில் தள்ளுபடி அல்லது ரத்து வழங்கப்படாது.
- முன்பதிவு செய்யப்படாத குழந்தைகளை பயண நாளில் அழைத்து வருவதைத் தவிர்க்கவும்.
- குழந்தைகளின் பாதுகாப்பு முழுமையாக பெற்றோர் / பாதுகாவலர்களின் பொறுப்பாகும்.

## உடல்நல அறிவிப்பு

- சர்க்கரை நோய், உயர் இரத்த அழுத்தம், இதய நோய் உள்ளிட்ட உடல்நலப் பிரச்சினைகள் உள்ளவர்கள் தங்களின் மருந்துகளை கட்டாயம் எடுத்துவர வேண்டும்.
- தனிப்பட்ட உடல்நலக் காரணங்களால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு ஆற்றுப்படை நிர்வாகம் பொறுப்பேற்காது.
- அவசரநிலையில் முதல் உதவி மற்றும் மருத்துவ உதவிக்கான வழிகாட்டுதல் மட்டுமே வழங்கப்படும்.
- மருத்துவச் செலவுகள் மற்றும் சிகிச்சை தொடர்பான அனைத்து பொறுப்புகளும் பயணியையே சாரும்.

## பயண ஒழுங்குமுறைகள்

- பயண நேரத்தை அனைவரும் கட்டாயம் பின்பற்ற வேண்டும்.
- தாமதமாக வருபவர்களுக்காக பயண அட்டவணை மாற்றப்படாது.
- குழுவின் ஒற்றுமை மற்றும் பயண அனுபவத்தை பாதிக்கும் வகையில் நடந்து கொள்ளக் கூடாது.
- வரலாற்றுத் தளங்கள், கோயில்கள் மற்றும் பொதுச் சொத்துக்களை மதித்து நடந்து கொள்ள வேண்டும்.
- பயணத்தில் கலந்து கொள்பவர்கள் தங்களுக்கு வேண்டியவற்றை அவர்களே கொண்டு வர வேண்டும்.
- பயணத்தில் ஏற்கனவே குறிப்பிட்ட தேநீர், உணவு மற்றும் குடிநீர் ஆகியவை மட்டுமே வழங்கப்படும். மேலும் தேவைப்படுவோர் அல்லது விருப்ப உணவு வேண்டுமெனில் அதற்கான கட்டணத்தை அவர்களே ஏற்க வேண்டும்.
- மரபு நடையில் மேற்கொள்ளும் பயணங்கள் வழக்கமான சுற்றுலாத் தளங்களுக்கு மாறான இடங்கள் என்பதால் கழிவறைகள் இருப்பது சற்று கடினம்; ஆகவே அதனை மனதில் கொள்ள வேண்டும்.

## பயண மாற்றம் / ரத்து

- பயணத்தின் போது இயற்கைச் சூழலில் எதிர்பாராத சம்பவங்கள் (பூச்சி அல்லது பாம்புக் கடி, விலங்குகளால் ஏற்படும் பாதிப்புகள், தவறி விழுதல் அல்லது பிற விபத்துகள்) ஏற்பட வாய்ப்புள்ளது.
- பங்கேற்பாளர்கள் தங்களது பாதுகாப்பில் முழு கவனம் செலுத்தி, பயண ஒருங்கிணைப்பாளர்களின் வழிகாட்டுதல்களை கட்டாயம் பின்பற்ற வேண்டும்.
- இத்தகைய எதிர்பாராத சம்பவங்கள் ஏற்பட்டால், ஆற்றுப்படை நிர்வாகம் இயன்றவரை உடனடி உதவி மற்றும் மருத்துவ உதவியைப் பெறுவதற்கான ஒத்துழைப்பை வழங்கும்; எனினும், அவற்றால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் மருத்துவச் செலவுகளுக்கான இறுதி பொறுப்பு பயணியையே சாரும்.
- வானிலை, இயற்கை சீற்றம், அரசாங்க உத்தரவு அல்லது தவிர்க்க முடியாத காரணங்களால் பயணம் மாற்றப்படவோ அல்லது ரத்து செய்யப்படவோலாம்.
- அத்தகைய சூழ்நிலைகளில் மாற்று தேதி அறிவிக்கப்படும் அல்லது நிர்வாகக் குழுவின் முடிவின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

“ பயணத்தில் பங்கேற்பதன் மூலம் மேற்கண்ட நிபந்தனைகள் அனைத்தும் ஏற்றுக்கொண்டதாக கருதப்படும். ”

Oct 31 & Nov 1 2026

**பயணக்கட்டணம்:**

₹8,999* GST உட்பட

முன்பதிவுக்கு

**+91 9384876772 +91 9487076772**